**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.548/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W-8 |
| Name | : | ஆனந்தராஜ், வயது 54 |
| Father Name/Husband Name | : | முத்துக்கருப்பன் |
| Village | : | மேலப்பாண்டவர்மங்கலம் |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | டிரைவர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 10th day of August 2024.

**(எதிரி ஆஜர்.)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மேலப்பாண்டவர்மங்கலத்தில் வசித்து டிரைவர் வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் (ஒப்புதல் வாக்குமூலத்தில்) உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். தேதி மாதம் ஞாபகம் இல்லை சுமார் இரண்டரை வருடத்திற்கு முன்னர் புதுரோட்டில் உள்ள பழைய நகராட்சி அலுவலகத்திற்கு அருகே வரும் போது எதிரியும் இன்னோரு பேப்பர்காரர் மற்றும் போலிசார் இருந்தார்கள்.,
2. என்னிடம் போலிசார் எதிரியை தெரியுமா என்று கேட்டார்கள் நான் தெரியும் என்று சொன்னேன். கையொப்பம் கேட்டார்கள் செய்து கொடுத்தேன். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நீங்கள் கையொப்பம் செய்த பின்னர் உங்களை போலிசார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போலிசார் கையொப்பம் கேட்டுக் கொண்டதன் பேரில் செய்து கொடுத்தீர்கள் என்றால்

சரிதான். அது என்ன வழக்கிற்காக கையொப்பம் கேட்டார்கள் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டிருந்தன என்பது பற்றி உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. நீங்கள் மட்டும் தான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் இல்லை இன்னோருத்தரும் செய்தார். அவர் யார் என்று தெரியாது என்றால் சரிதான்.

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.